# கணக்கீடு

## நிறைவில் பதிவு



Start Your Learning Journey with e-thaksalawa

The National e-learning Portal for The General Education

## பயிற்சி வினாக்கள்

1) 31.12.2017 இல் முடிவடைந்த ஆண்டுக்கான கண்ணன் வியாபாரத்துடன் தொடர்பான தகவல்கள் வருமாறு.

| விபரம் | ரூபா |
|---|---|
| சரக்கிருப்பு அதிகரிப்பு | ரூ. 50,000 |
| கடன்பட்டோர் குறைவு | ரூ. 120,000 |
| கடன்பட்டோரிடம் பெற்ற காசு | ரூ. 920,000 |
| மொத்த இலாபம் கிரயத்தில் | 25% |

கண்ணன் வியாபாரத்தின் 31.12.2017 இல் முடிவடைந்த ஆண்டுக்கான கொள்வனவுப் பெறுமதி

1) ரூ. 650,000 2) ரூ. 690,000 3) ரூ. 800,000 4) ரூ. 390,000

5) ரூ. 850,000

2) வியாபாரமொன்றின் 31.03.2017 இல் முடிவடைந்த வருடத்திற்கான வரைபு வருமானக்கூற்றின்படி மொத்த இலாபம் மற்றும் தேறிய இலாபம் முறையே ரூ. 840,000, ரூ. 260,000 ஆகும் அதனைத் தொடர்ந்து 01.04.2016 இல் உள்ளவாறான சரக்கிருப்புக்கள் ரூ. 20,000 ஆல் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் 31.03.2017 இல் உள்ளவாறான சரக்கிருப்புக்கள் ரூ.30,000 ஆல் கூட்டி மதிப்பிடப்பட்டதாகவும் மேலும் நிறுவன உரிமையாளருக்குச் சொந்தமான கட்டடத்தை நிறுவன நோக்கத்திற்காகப் பயன்படுத்தியமைக்காக நிறுவனத்தினால் உரிமையாளருக்கும் செலுத்தப்பட்ட வாடகை ரூ. 60,000 பதியப்படவில்லை எனவும் தெரியவந்துள்ளது.

31.03.2017இல் முடிவடைந்த வருடத்திற்கான சரியான மொத்த இலாபம், தேறிய இலாபம் என்பன

| | மொத்த இலாபம் (ரூ.) | தேறிய இலாபம் (ரூ.) |
|---|---|---|
| 1) | 730,000 | 200,0000 |
| 2) | 790,000 | 150,000 |
| 3) | 830,000 | 190,000 |
| 4) | 850,000 | 210,000 |
| 5) | 890,000 | 250,000 |

3) கம்பனி ஒன்றில் 31.03.2017இல் இருந்த முழுச் சரக்குகளும் வெள்ளத்தின் காரணமாக அழிவடைந்துள்ளது. 31.03.2017இல் முடிவடைந்த வருடத்திற்கான பின்வரும தகவல்கள் தரப்படுகின்றன.

| | |
|---|---|
| 01.04.2017 இல் சரக்கிருப்பு | ரூ. 1,500,000 |
| கொள்வனவுகள் | ரூ. 3,500,000 |
| கொள்வனவுத் திரும்பல்கள் | ரூ. 500,000 |
| விற்பனைகள் | ரூ. 4,800,000 |
| விற்பனைச் செலவுகள் | ரூ. 600,000 |


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

சரக்குகளை அவற்றின் கிரயத்தின் மீது 20% இலாபம் வைத்து விற்பனை செய்வது கம்பனியின் கொள்கையாகும். 31.03.2017இல் அழிவடைந்த சரக்குகளின் பெறுமதி யாது?

1) ரூ. 500,000 2) ரூ. 660,000 3) ரூ. 750,000 4) ரூ. 1,160,000

5) ரூ. 1,500,000

4) 31.03.2017 இல் முடிவடைந்த வருடத்திற்கான கம்பனியொன்றின் பின்வரும் தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| விபரம் | ரூபா |
|---|---|
| கடன் விற்பனைகள் | 780,000 |
| கடன்பட்டோருக்கு அனுமதித்த கழிவுகள் | 65,000 |
| பதிவழிக்கப்பட்ட அறவிடமுடியாக் கடன் | 20,000 |
| விற்பனைத் திரும்பல்கள் | 35,000 |

குறிப்பிட்ட வருடத்தில் கடன்பட்டோர் மீதியில் ஏற்பட்ட குறைவு ரூ.80,000 31.03.2017 இல் முடிவடைந்த வருடத்திற்கான கடன்பட்டோரிடமிருந்து பெறப்பட்ட காசு எவ்வளவு?

1) ரூ. 580,000 2) ரூ. 660,000 3) ரூ. 695,000 4) ரூ. 715,000
5) ரூ. 740,000

5) தனு 01.01.2017 இல் மூலதனமாக ரூ. 1,000,000 ஐ முதலீடு செய்து வியாபாரம் ஒன்றை ஆரம்பித்தார். இவர் இத்தொகையில் 90% ஐ பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக செலவழித்ததுடன் இப் பொருட்களைக் கிரயத்தில் 30%ஐக் கூட்டி விற்பனை செய்துள்ளார். இவ் வியாபாரத்தின் தேறிய சொத்துக்கள் 31.03.2017 இல் ரூ.1,200,000 ஆகும். இக்காலப்பகுதியில் எதுவித மேலதிக மூலதனமோ அல்லது பற்றுக்களோ மேற்கொள்ளப்படவில்லை. 31.03.2017 இல் முடிவடைந்த காலத்திற்கான பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

அ) இலாபம் ரூ. ………………………… ஆ) செயற்பாட்டுச் செலவினம் ரூ ……………………..

6) வானதி வியாபாரம் தமது செயற்பாடுகளை 01.04.2017 இல் ஆரம்பித்தது. இது பொருட்களை கிரயத்தில் 25% கூட்டி விற்பனை செய்கின்றது. 31.03.2018 இல் முடிவடைந்த வருடத்திற்கான விற்பனை ரூ.625,000 ஆகும். 31.03.2018 இல் சரக்கிருப்புகளின் கிரயம் ரூ. 20,000 ஆகும். பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

அ) வருடத்திற்கான மொத்த இலாபம் : ரூ. ………………………………….

ஆ) வருடத்திற்கான கொள்வனவுகள் : ரூ …………………………………..

தொகுப்பு: திரு. ம.அசோக்குமார் (ஆசிரியர் - கணக்கீடு, யா/யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)

கணினி வடிவமைப்பு: திரு. இ.சிவச்செல்வன் (ஆசிரியர் - தகவல் தொ. தொழிநுட்பம், யா/நெடுந்தீவு றோ.க. மகளிர் கல்லூரி)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

7) கமல் வியாபாரமானது 31.03.2017 இல் காணப்பட்ட தனது முழு சரக்கிருப்புக்களையும் தீயினால் இழந்துள்ளது. பின்வரும் தகவல்கள் அத்தினத்தில் கிடைக்கப் பெற்றன.

| விபரம் | தொகை |
|---|---|
| 01.04.2016 இல் சரக்கிருப்பு | ரூ. 200,000 |
| குறித்த வருடத்தில் செய்த கொள்வனவுகள் | ரூ. 1,500,000 |
| குறித்த வருடத்திற்கான விற்பனைகள் | ரூ. 2,000,000 |
| நிறுவனத்தின் விற்பனையில் மொத்த இலாபம் | 20% |

அ) தீயினால் அழிவடைந்த சரக்கிருப்பின் பெறுமதி என்ன?

………………………………………………………………………………………………

ஆ) காப்புறுதிக் கம்பனியானது அழிவடைந்த சரக்குகளின் பெறுமதியில் 80% இனைத் தருவதாக ஒப்புக் கொள்ளுமாயின் கம்பனியின் 31.03.2012 இல் உள்ளவாறான தேறிய சொத்துக்கள் மீதான தேறிய விளைவு யாது?

………………………………………………………………………………………………


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk